Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

MONDAY, JANUARY 20, 2025

திங்கட்கிழமை, 20 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 140 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

யாழ்.நகைக்கடையில் பணம் அபகரிப்பு

## புலனாய்வு பிரிவைச் சேர்ந்த மேலுமிருவர் கைது



நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம்- கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றுக்கு சென்று நூதனமான முறையில் பணத்தை அபகரித்த சம்பவத்தில் இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் இதுவரை ஆறு பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கு அமைய, யாழ்ப்பாண குற்ற விசாரணை பொலிஸ் பொறுப்பதிகாரியான கலும் பண்டாரா தலைமையிலான குழுவினர், இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

பிரதான சூத்திரதாரி சுன்னாகம் பகுதியில் ஐந்து இலட்சம் ரூபாய் பணத்துடன் வெள்ளிக்கிழமை(17) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த செயலுக்கு உடந்தையாக இருந்த வான் சாரதி உள்ளிட்ட மூவர் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து, முன்னெடுக்கப்படும் விசாரணையில், இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்த நிலையில், கொழும்பில் வைத்து இருவரும் சனிக்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## மீன் தொட்டியில் விழுந்து குழந்தை மரணம்

வாதுவை - தல்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த மீன் தொட்டியில் விழுந்து 19 மாத குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## விக்டர் ஐவன் காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலாளர், புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் விக்டர் ஐவன் ஞாயிற்றுக்கிழமை (19) தனது 75ஆவது வயதில் காலமானார்.

## “அழகான வார்த்தைகள் சாத்தியமில்லாது போயுள்ளன”

விவசாயிகளுக்கான 25,000 ரூயாய் உர மானியம் இன்னும் சரியாக வழங்கப்படவில்லை. கடந்த பாராளுமன்ற அமர்விலும் இது குறித்து கேள்வி எழுப்பினேன். இன்னும் இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 40% மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 25,000 ரூபாய் முழுமையான மானியம் முறையாக வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



மன்னார் துப்பாக்கிச் சூடு:

## இராணுவ சிப்பாய் உட்பட மூவர் கைது

மன்னார் நீதிமன்றத்திற்கு அருகில் கடந்த வியாழக்கிழமை (16) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், துப்பாக்கித்தாரியும், அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரியான இராணுவ சிப்பாய், கொழும்பு-05, நாரஹேன்பிட்ட இராணுவ வைத்தியசாலையில் பணியாற்றுவர் என்றும், ஒத்துழைப்பு வழங்கிய இருவரில் ஒருவர், இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் ஆவார்.

இதேவேளை, 2023 ஒகஸ்ட் 24ஆம் திகதியன்று அடம்பன் பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு இருவர் பலியாவதற்குக் காரணமாக இருந்தவர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## முன்னாள் அமைச்சர் கைது



சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைப் பயன்படுத்திப் பொருத்தப்பட்ட லொறியை வைத்திருந்த குற்றச்சாட்டில் பாணந்துறை மத்திய ஊழல் தடுப்பு பணிக்குழுவால் (PCTF) இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

கல்கிசை துப்பாக்கி பிரயோகத்தில்

## கோஸ் மல்லியின் கூட்டாளி மரணம்



கல்கிசை - சிறிபால பிரதேசத்தில், ஞாயிற்றுக்கிழமை(19) பிற்பகல் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 24 வயதான நபர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார் நடத்திய தேடுதலில், தேபொல கௌடானபிரதேசத்தில் வைத்து, துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

அடைமழையால்

## 4 நாட்களில் 910 பேர் பாதிப்பு

### பெரும் பாதிப்பு; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வி.ரி.சகாதேவராஜா, செ.திவாகரன்

நாட்டின் பல பாகங்களிலும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாழ் நிலங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

அத்துடன், விளைச்சல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. போக்குவரத்தும் ஆங்காங்கே பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐந்து மாகாணங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால், 325 குடும்பங்களைச் சேர்ந்த 910 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2





## கிழக்குக்கு திங்கள் விடுமுறை

எஸ்.கீதபொன்கலன்

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகக் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் திங்கட்கிழமை(20) விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகள் நடைபெறுவதால், திங்கட்கிழமை(20) நடைபெறவிருந்த பரீட்சைகள் சனிக்கிழமை(25) அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## கந்தர விபத்தில் 62 பேர் படுகாயம்

மாத்தறை-தங்கல்ல பிரதான வீதியிலுள்ள கந்தர பகுதியில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் சுமார் 62 பயணிகள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்க ப்பட்டுள்ளனர். அதில் அறுவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஆற்றுக்குள் பாய்ந்த ஜீப்: இருவர் பலி; ஒருவர் மாயம்



கண்டி- பன்வில பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள ஹுலுகங்கைக்குள் ஞாயிற்றுக்கிழமை (19) மாலை அதிசொகுசு ஜீப் வண்டி விழுந்து விபத்துக்குள்ளானதல், இருவர் மரணமடைந்துள்ள துடன், மற்றுமொருவர் காணாமல் போயுள்ளதாக பன்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர். பெண்ணொருவரும் ஒப்பந்ததாரரர் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில், பன்வில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

17 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு

## மண்சரிவு எச்சரிக்கை



நாடு முழுவதும் பெய்து வரும் கடும் மழை காரணமாக நான்கு மாவட்டங்களில் உள்ள 17 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கையை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஞாயிற்றுக்கிழமை (19) விடுத்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, பதுளை மாவட்டத்தில் உள்ள பசறை, பதுளை மற்றும் ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கண்டி மாவட்டத்தில் உள்ள மெததும்பர, பாத்ததும்பர மற்றும் டோலுவ பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நிலை 1 மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

தொடர்ச்சி P2

திங்கட்கிழமை, 20 ஜனவரி 2025 தமிழ்Mirror www.tamilmirror.lk

PAGE 1 தொடர்ச்சிகள்

# புலனாய்வு பிரிவைச் சேர்ந்த மேலுமிருவர் கைது

குறித்த நகைக் கடைக்குச் சென்ற குழுவினர் தாம் பொலிஸ் புலனாய்வு பிரிவு (சி.ஐ.டி.) என தெரிவித்து, சுமார் 30 இலட்சம் ரூபாய் பணத்தைப் பறித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, கண்காணிப்பு கெமராக்கள் உதவியுடன் குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மீன் தொட்டியில் விழுந்து குழந்தை மரணம்

சம்பவத் தினத்தன்று தாயும் தந்தையும் வீட்டில் இருந்துள்ளனர். இதன்போது, வீட்டின் முன் உள்ள மீன் தொட்டியின் அருகே குழந்தை நின்று கொண்டிருந்தது, பின்னர் குழந்தையை காணாததால் தேடியுள்ளார்.

இதன்போது, அங்கு வைக்கப்பட்டிருந்த மீன் தொட்டியில் விழுந்ததை தாய் பார்த்ததாகவும். அக்குழந்தை உடனடியாக மீட்டு எடுத்தபோது, குழந்தை உயிரிழந்து விட்டது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## “அழகான வார்த்தைகள் சாத்தியமில்லாது போயுள்ளன”

குருநாகல், கல்கமுவ தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் பந்துல பண்டாரநாயக்க, சனிக்கிழமை (18) அன்று ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, விதைக்கும் காலம் என்பதால் உர மானியத்தை உடனடியாக வழங்க வேண்டும். அன்று அழகான வார்த்தைகளைப் பயன்படுத்திச் சொன்ன விடயங்கள் இன்று சாத்தியமில்லாது போயுள்ளன. பேச்சுக்கும் செயலுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தேர்தலுக்கு முன்னர் 33% மின் கட்டணம் குறைக்கப்படும் என கூறப்பட்ட போதும், அதனை 37% அதிகரிக்க முன்மொழிந்துள்ளதாக மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார். 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது என மின்சார சபை கூறியபோது, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மக்கள் ஆலோசனைகளைப் பெற்று, மின் கட்டணத்தை 20% குறைத்திருக்கிறது.

தேர்தலின் போது, ஒரு கதையைச் சொல்லி, இப்போது இன்னுமொரு கதையைச் சொல்லி மக்களின் பலமான கோரிக்கையைக்கூடப் புறக்கணிக்கும் நிலையை அரசு எட்டியுள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கும் தெளிவான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. மக்களின் நலனுக்காக எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பது தெரியவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

## கோஸ் மல்லியின் கூட்டாளி...

> **போதைப்பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான படோவிட்ட அசங்க தலைமையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது**

துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயன்படுத்தப்பட்ட 9 மில்லி மீட்டர் ரகத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் 47 வயதானவர் என்றும், அவர் இதற்கு முன்னர் நடத்திய மனித படுகொலையின் சந்தேக நபர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான படோவிட்ட அசங்க தலைமையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான கோஸ் மல்லியின் நெருங்கிய கூட்டாளியே பலியாகியுள்ளார் என தெஹிவளை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த படோவிட்ட பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் களுபோவில மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## இராணுவ சிப்பாய் உட்பட மூவர் கைது

இரு குழுக்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவும் முரண்பாடு காரணமாக, பணத்தைக் குத்தகைக்குப் பெற்று வியாழக்கிழமை (16) அன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை(16) விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருந்த நிலையில் விசாரணைகளுக்காகச் சென்ற சந்தேக நபர்கள் மூவர் உள்ளடங்களாக நான்கு நபர்கள் மீது நீதிமன்றத்திற்கு முன் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது இருவர் உயிரிழந்ததுடன் , மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

அந்த இராணுவ சிப்பாயை, பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மன்னார் மற்றும் பேசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 4 நாட்களில் 910 பேர் பாதிப்பு

வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம், வட மாகாணத்தில் கிளிநொச்சி, வடமேல் மாகாணத்தில் குருணாகல், தென் மாகாணத்தில் காலி, மத்திய மாகாணத்தில் நுவரெலியா ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. ஜனவரி 15ஆம் திகதி முதல், பெய்த மழையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

\கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக அம்பாறை சேனாநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஞாயிற்றுக்கிழமை (19) அடை மழை பெய்து கொண்டிருந்தது. தாழ் நிலப் பிரதேசங்கள் எல்லாம் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது.

அம்பாறை - மகாஓயா வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளது . இவ் வீதியால், போக்குவரத்துக்கு செய்பவர்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துவது உகந்தது என கூறப்படுகிறது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக ஞாயிற்றுக்கிழமை (19) பிற்பகல் நேரத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நுவரெலியா - உடப்புசல்லாவ பிரதான வீதியில் கந்தப்பளை புதிய வீதி பகுதியில் வெள்ள நீர், வீதியை ஊடறு பாய்வதால் போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது . இதனால் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நுவரெலியா கந்தப்பளை பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால், விவசாயம் செய்யும் தாழ் நிலங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரால் அறுவடைக்குத் தயாரான மரக்கறி வகைகள் பாதிக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாகப் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் கால்வாய்கள் முறையாகப் புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்படாததன் காரணமாக அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய நிலங்களுக்கு அழிவு ஏற்பட்டு மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்யும் மழை காரணமாக நுவரெலியாவில் பிரதான வீதிகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் பனி மூட்டம் மற்றும் மழையுடனான காலநிலை நிலவும் போது தமது வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிர செய்தவாறு பயன்படுத்துவதன் மூலம் விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## உணவகம் இடிந்து விழுந்ததில் ஆறு மாணவர்கள் காயம்

■ *மலையக தமிழ்மிரர் நிருபர்கள்*

கினிகத்தேன பொலிஸ் நிலையத்திற்கு எதிரே அமைந்துள்ள பாதுகாப்பற்ற முறையில் கட்டப்பட்ட உணவகத்தில் உணவு வாங்கச் சென்ற ஆறு மாணவர்கள், உணவகம் இடிந்து விழுந்ததில் காயமடைந்து கினிகத்தேன மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் அம்பகமுவ மத்திய கல்லூரியில் 10 ஆம் வகுப்பில் படிக்கும் ஆறு மாணவர்கள் காயமடைந்துள்ளனனர். இந்த சம்பவம், சனிக்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை நகரில் நடைபெற்ற தனியார் வகுப்பில் கலந்து கொள்வதற்கு முன்பு முதல் உணவைப் பெறுவதற்காக உணவகத்திற்குச் சென்றிருந்தபோது



விபத்து ஏற்பட்டதாக கினிகத்தேன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விராஜ் விதானகே தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் குழு உணவு விடுதியின் பாதுகாப்பற்ற அடித்தளத்தில் தங்கியிருந்தபோது, உணவு விடுதியின் மேல் தள தரை ஓடுகள் சரிந்து விழுந்ததில், மாணவர்கள் சுமார் 15 அடி உயரத்திலிருந்து விழுந்து காயமடைந்தனர்.

காயமடைந்த மாணவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விசாரணையில், உணவகம் மரத்தைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட ஒரு தற்காலிக அமைப்பு என்றும், உணவகத்தில் உள்ள மரம் உக்கி விட்டது என்றும் தெரியவந்தது. உணவகத்தைத் தற்காலிகமாக மூடி விட்டு, அருகில் அமைந்துள்ள இதே போன்ற பல கடைகள் மீது முறையான நடவடிக்கை எடுக்குமாறு அம்பகமுவ மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டது. விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கந்தர விபத்தில் 62 பேர் படுகாயம்

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 35 பெண்கள், 26 வயதான நெதர்லாந்து பிரஜை உட்பட 27 ஆண்கள், மூன்று சிறார்கள், பேருந்தொன்றின் சாரதி மன்றும் இன்னும் இருவர் அடங்குகின்றனர்.

காயமடைந்த பயணிகள் சிகிச்சைக்காக கந்தர மற்றும் மாத்தறை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் இரண்டு பேருந்துகளும் பலத்த சேதமடைந்துள்ளன என தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மே ற்கொ ண்டுவருகின்றனர்.

## மண்சரிவு எச்சரிக்கை

கண்டி மாவட்டத்தில் உள்ள உடதும்பர பிரதேச செயலகப் பிரிவுக்கு அதே நேரத்தில் நிலை 2 மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் ரிதிகம மற்றும் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பல்லேகம, அம்பன்கங்கா கோரல, பல்லேபொல. மாத்தளை மற்றும் நாவுல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு முதல் நிலை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது, அதே நேரத்தில் யடவத்த, உக்குவெல, ரத்தோட்டை மற்றும் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் நிலை 1 எச்சரிக்கையின் கீழ் உள்ள பகுதிகளில் 75 மில்லி மீட்டருக்கும் அதிகமான மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.

அதே நேரத்தில், நிலை 2 எச்சரிக்கையின் கீழ் உள்ள பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் 100 மில்லி மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

அந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தேசிய வானிலை சேவை அறிவுறுத்தியுள்ளது.

அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விழிப்புடன் இருக்க வேண்டிய பகுதிகள். கட்டிட ஆராய்ச்சி அமைப்பு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## முன்னாள் அமைச்சர் கைது

ஹப்புத்தளை - முத்துவானவத்தை தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட முன்னாள் அமைச்சருக்கு சொந்தமானது என்று கூறப்படும் லொறி, கைப்பற்றப்பட்டுள்ளது. அவரை வாகனத்துடன், பதுளை நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (20) ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விஜித் விஜயமுனி சொய்சாவிடம் புதன்கிழமை (15) விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. எனினும், விசாரணையின் இடையில் அவர் திடீரென்று சுகவீனமுற்றதால், விசாரணைகளுக்காக வேறொரு நாளில் வருகை தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

## ‘சோல்’ பொக்கெட்டில் 3 நெக்லஸ்கள் சிக்கின

> **போலி பொக்கெட்டுக்குள் 216 கிராம் எடையுள்ள இந்த மூன்று தங்க நெக்லஸ்களை மறைத்து வைத்திருந்தபோது, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்**

> **பெண்ணையும் தங்க நெக்லஸையும் கட்டுநாயக்க நாயக்கந்த சுங்கத் தடுப்பு அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

தலை மற்றும் கழுத்தை சுற்றி அணியும் ‘சோல்’ என்றழைக்கப்படும் ஒரு மேலங்கியில் ஒரு போலிப் பொக்கெட்டை தயாரித்து அதற்குள் 4.9 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 03 தங்க நெக்லஸ்களை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியே எடுத்து செல்லமுயன்ற பெண், ஞாயிற்றுக்கிழமை (19) காலை பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டார்.

வத்தளை, ஹெந்தலையைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்மணி, விமானம் மூலம் நாட்டிற்கு பல்வேறு பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்ணுக்கு பயண உதவியாளராக பணிபுரிகிறார்.

ஞாயிற்றுக்கிழமை(19) காலை 05.15 மணிக்கு துபாயிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் UL-226 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

அவர் தனது கழுத்திலும் தலையிலும் அணிந்திருந்த ‘சோல்’ சால்வைக்குள் விசேடமாக தைக்கப்பட்ட போலி பொக்கெட்டுக்குள் 216 கிராம் எடையுள்ள இந்த மூன்று தங்க நெக்லஸ்களை மறைத்து வைத்திருந்தபோது, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைக்காக அந்தப் பெண்ணையும் தங்க நெக்லஸையும் கட்டுநாயக்க நாயக்கந்த சுங்கத் தடுப்பு அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பெண்ணின் முக்கிய தொழிலதிபர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சட்டவிரோதமாக தங்க நெக்லஸை எடுத்துச் சென்றபோது கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.















# கௌரவிப்பு நிகழ்வு

■ பாறுக் ஷிஹான்

சிலோன் மீடியா போரத்தின் SLAS ஆளுமைகளுடனான சந்திப்பும் கௌரவிப்பும் அட்டப்பளம் தனியார் விடுதியில் போரத்தின் தலைவர் ரியாத் .ஏ.மஜீத் தலைமையில் அமைப்பின் ஐந்தாவது வருட நிறைவை ஒட்டி திங்கட்கிழமை(13) நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில், பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் சிரேஷ்ட சேவை நிர்வாக அதிகாரிகள் உட்பட சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் என பலரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பிரதம அதிதியாக மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாஹ், விசேட அதிதியாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வே. ஜெகதீசன், என்.எஸ். கன்ஸ்ரக்ஷன் எஞ்ஜினெரிங் கம்பனி முகாமைத்துவ பணிப்பாளர் நியாஸூம் கலந்து கொண்டுள்ளனர்.

## 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவ இந்தியா– இலங்கை இடையே

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்திய அரசாங்கத்தின் 508 மில்லியன் ரூபாய் நன்கொடை உதவியுடன், இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் 'தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை ஸ்தாபித்தல்' குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோரால், ஜனவரி 16ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், இலங்கை அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளில் குறிப்பாக நுவரெலியாவில் உள்ள 48 பாடசாலைகளிலும், கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா 6 பாடசாலைகளிலும் மாணவர்களின் பயன்பாட்டுக்காக 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை ஸ்தாபிப்பதே நோக்கமாகும். இந்த முயற்சியானது பாடசாலைகளில் அறிவுப் பகிர்வை மேம்படுத்தும் அதேவேளை, மாணவர்களுக்கு கற்றல் மூலமான நன்மைகளையும் பெற்றுத்தரும். அத்துடன் இந்தப் பாடசாலைகளின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப ஒருங்கிணைப்பையும் மேம்படுத்தும்.

இலங்கையுடனான 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டத்துடன், கிட்டத்தட்ட சகல முக்கிய துறைகளிலும் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் மக்களை இலக்காக் கொண்ட அபிவிருத்தி உதவி திட்டங்கள் நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள இலங்கை மக்களின் அன்றாட வாழ்வில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.




குறித்த ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவும் திட்டமானது, இந்தியாவால் இலங்கையின் கல்வித் துறையில் கடந்த காலங்களிலும் தற்போதும் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத்தி திட்டங்களுடன் இணைந்து கொள்ளும் மற்றொரு முயற்சியாகும். நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் ஆங்கில மொழி நிலையங்களை அமைத்தல்,ருஹுணுபல்கலைக்கழகத்தில் இரவீந்திரநாத் தாகூர் நினைவு கேட்போர் கூடம் உட்பட நாடு முழுவதும் உள்ள ஏராளமான நிறுவனங்களில் கேட்போர் கூடங்களை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல், வடமத்திய மாகாணத்தில் பொலன்னறுவையில் பல்லினமும் மொழிப் பாடசாலையை ஸ்தாபித்தல்,வட மாகாணத்தில் 100க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட புனரமைப்பு பணிகள், நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு 110 பேருந்துகளை வழங்கியமை, தொழிற்கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு, தென் மாகாணத்தில் 200 பாடசாலைகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் கணினி கூடங்களை நிறுவுதல், யாழ். பல்கலைக்கழகம் மற்றும் மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உதவிகள் தேவைப்படும் மாணவர்களுக்கு நிதி உதவிவழங்கல் மற்றும் ஏனைய பல திட்டங்கள் இதில் உள்ளடங்குகின்றன. அத்துடன், 9 பெருந்தோட்டப் பாடசாலைகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு இந்திய அரசின் நன்கொடை ஆதரவை இருமடங்காக அதிகரிப்பதற்காக இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களால் அண்மையில் இராஜதந்திர ஆவணங்கள் பரிமாறப்பட்டன.

இந்திய வம்சாவளி தமிழ் சமூகம் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்தமையைக் குறிக்கும் வகையில், கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 750 மில்லியன் ரூபாய் பல்துறை நன்கொடை உதவியின் கீழ், பெருந்தோட்டப் பாடசாலைகளில் STEM பாடங்களில் 3 மாத ஆசிரியர் பயிற்சித் திட்டமும் அண்மையில் நடத்தப்பட்டது. இலங்கையின் பெருந்தோட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் 2,000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேங்காய்கள் திருட்டு

■ சுமனசிறி குணதிலக

தென்னந்தோட்டத்தில் உள்ள களஞ்சியசாலையின் கதவு உடைக்கப்பட்டு 450 தேங்காய்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் பிபில பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

பிபில பொலிஸ் பிரிவின் மஹியங்கனை வீதிக்கு அருகிலுள்ள தென்னந்தோட்டத்தில் இருந்து 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 450 தேங்காய்கள் திருடப்பட்டுள்ளதாக பிபில பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தேங்காய்களுடன், தேங்காய்களை உரிக்கப் பயன்படுத்தப்பட்ட இரும்புத் தூண் மற்றும் மண்வெட்டியும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மொனராகலை நகரைச் சேர்ந்த நில உரிமையாளர் தென்னை நிலத்தைப் பார்வையிட்டபோது, களஞ்சியசாலையின் கதவு உடைக்கப்பட்டு காலியாக இருந்தது. அங்கிருந்து தேங்காய்களைத் திருடிச் சென்றுள்ளமை அடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சிறுமி வன்புணர்வு: ஆசிரியர் கைது

பத்தாம் வகுப்பில் கல்விப்பயிலும் மாணவியான 17 வயது சிறுமியை, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டு, தலைமறைவாகியிருந்த தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர், வழக்கறிஞருடன் பொலிஸ் நிலையத்தில் சரணமடைந்தபோது, புதன்கிழமை (13 ) கைது செய்யப்பட்டுள்ளதாக சியம்பலாண்டுவ பொலிஸார் தெரிவத்துள்ளனர்.

முத்துகண்டிய பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் பணிபுரியும் இந்த 55 வயதான ஆசிரியர், சியம்பலாண்டுவ நகரில் ஒரு தனியார் வகுப்பை நடத்தி வருகிறார்.

அந்த வகுப்புக்கு சென்ற மாணவியை, அந்த ஆசிரியர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இதுதொடர்பில் தனது தாயாரிடம் அந்த மாணவி கூறயுள்ளார். இதனையடுத்து, சியம்பலாண்டுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுமியின் தந்தை இறந்த நிலையில், சிறுதி தனது தாய் மற்றும் சகோதரி வசிக்கிறார்.

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சியம்பலாண்டுவ ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மாடுகளுடன் லொறி விபத்து:

# மாயமான இரண்டு மாடுகள் திரும்பின

■ செ.தீவாகரன், டி.சந்ரு

நுவரெலியா- ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் சனிக்கிழமை (18) அதிகாலை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி விபத்துக்குள்ளானதில் லொறியின் உதவியாளர் பலத்த காயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த லொறியின் உதவியாளர் நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமையால், லொறி கட்டுப்பாட்டை இழந்து, மண் மேட்டில் மோதி விபத்துக்குள்ளானது.

வெளிமடை பகுதியில் இருந்து நுவரெலியா வழியாக ஹட்டன் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றுக்குக் குறித்த மாடுகளை ஏற்றிச் சென்ற போதே குறித்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான போது, லொறியில் 9 மாடுகள் இறந்துள்ளன. அவற்றில் 2 மாடுகளுக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டு உள்ளமையால் அருகில் உள்ள மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும்



இரண்டு மாடுகள் மாயமான நிலையில், நீண்ட நேரம் தேடப்பட்டு அருகில் உள்ள தேயிலைத் தோட்டத்திலிருந்து அவற்றை அழைத்து வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நானுஓயா-ரதல்ல குறுக்கு வீதியில் ஐந்து தொன்களுக்கும் குறைவான வாகனங்கள் மாத்திரம் சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸாரும் இணைந்து இந்த வீதியின் போக்குவரத்து தொடர்பில் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் ஏராளமான பதாதைகள் வீதியில் இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், சட்டங்களை மீறும் சாரதிகள், இந்த வீதியில் ஐந்து தொன்களுக்கும் அதிக எடையுள்ள வாகனங்களைச் செலுத்துவதன் காரணமாக அதிக விபத்துக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸார் மற்றும் பொறுப்பான அதிகாரிகள் இணைந்து நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் இங்கு செல்லாமல் தடுப்புகளைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.


இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பலத்த காற்றினால் கூரைகள் சேதம்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில், ஞாயிற்றுக்கிழமை(19) காலை 6.45 மணியளவில் வீசிய பலத்த காற்றினால் கொலை விலக்கி மாதா ஆலயம் மற்றும் பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு சேதமாகியுள்ளன.

இந்த அனர்த்தத்தால் முப்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதி அளவிலும் புனித கொலை விலக்கி மாதா ஆலய திருப்பண்ட அறைகள் முற்றாகவும்



சேதமடைந்துள்ளன.


அத்துடன், சில படகுகளும் பகுதி அளவில் சேதமாக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர்.

# மரம் விழுந்ததில் வீடு சேதம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ, செ.தி.பெருமாள்

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனராஜா தோட்டத்தின் கீழ் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (19) காலை 11 மணியளவில் தற்காலிகமாகக் கட்டப்பட்ட வீட்டின் மீது யூகலிப்டஸ் மரம் விழுந்ததில், வீட்டில் இருந்த ஒரு பெண் காயமின்றி தப்பியதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மரம் விழுந்ததில் வீடு முற்றிலுமாக சேதமடைந்ததாகவும் பொலிஸார்



குறிப்பிட்டுள்ளனர்.

காய்ந்து இருந்த மரத்திற்கு, விறகு பெறும் நோக்கில், ஒரு குழுவினர் தீ வைத்ததாகவும், தீ விபத்து காரணமாக மரம் அடிவாரத்தில் முறிந்து விழுந்ததாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பாலியல் வன்புணர்வுகள் அடிமைத்தனத்தின் பொது பிரச்சினையாக உள்ளது

எமது நாட்டில் நாளுக்கு நாள் கொலை, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் அடிக்கடி தலைப்புச் செய்திகளாக இடம்பெறுகின்றன. கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடுகையில், பல்வேறு குற்றச் செயல்களுக்கு ஆளாகும் இளம் பருவத்தினரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காண்கிறோம்.

இளைஞர்கள் அந்தந்த நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளனர். ஒரு நபரைக் குற்றம் செய்யத் தூண்டும் விடயத்தில், அவர்களின் தனிப்பட்ட ஆளுமைக் காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தனிப்பட்ட ஆளுமை காரணிகள் என்பது ஒரு நபரின் நடத்தையுடன் தொடர்புடைய வடிவங்கள் ஆகும்.

அவர்களில் சமூக விரோத நடத்தைகளைக் காட்டுபவர்களும் அடங்குவர். இளம் பருவத்திலிருந்து முதுமை வரை தனிநபர்களிடம் சமூக விரோத மனப்பான்மைகளும் நடத்தை முறைகளும் வெளிப்படலாம், மேலும் இதன் தோற்றம் தனிநபரின் குழந்தைப் பருவத்தில் உள்ளது என்று சொல்ல வேண்டும்.

மனிதர்களில் முதிர்ந்த பாலியல் ஆசை பொதுவாகப் பருவமடைதலுடன் உருவாகிறது. இளம் பருவத்தினரின் மூளை நரம்பு ரீதியாக முழுமையாக வளர்ச்சியடையாததாலும், இளம் பருவத்தினரின் பாலியல் தொடர்பான ஆபத்து அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கலாம். சுயக்கட்டுப்பாடு, உந்துவிசை கட்டுப்பாடு மற்றும் ஆபத்து விழிப்புணர்வு ஆகியவற்றிற்கு முக்கியமான மன முதிர்ச்சி, இளமைப் பருவத்தில் முழுமையாக வளர்ச்சியடையாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேபோல், பெரும்பாலும் ஒரு சமூக விரோத ஆளுமையின் மூலமாக ஒருவரின் சொந்த வீடு உள்ளது. செயலற்ற குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள், சிறு வயதிலிருந்தே அன்பு மற்றும் கவனிப்பின் அத்தியாவசியத் தேவைகள் இல்லாமல் இருப்பதால், சமூகத்தில் கட்டுப்பாடற்ற, ஒழுக்கமற்ற நபர்களாக விடப்படுகிறார்கள். அவர்கள் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஒத்த குணாதிசயங்களைக் கொண்ட கட்சிகளை ஆதரிக்க முனைகிறார்கள். அங்கிருந்துதான் குழு குற்றங்களும் புதிய குற்றக் கும்பல்களும் உருவாகத் தொடங்குகின்றன.

அதேபோல், நீண்டகாலமாக மது மற்றும் போதைப்பொருட்களுக்கு ஆளாக நேரிடுவதும் இத்தகைய குழப்பமான மனதிற்கு ஒரு முக்கிய காரணமாகும். இது அதிகரித்த மன அழுத்தம் ய பதட்ட உணர்வுகளுக்கு வழிவகுக்கிறது, இது குற்றவியல் நடத்தை தோன்றுவதற்கு வழிவகுக்கிறது.

பாலியல் பற்றிய அறிவு இல்லாமை, இந்த தலைப்பைப் பற்றி வெளிப்படையாகப் பேசப் பயம் மற்றும் அவமானம் ஆகியவை சிறார் குற்றங்களுக்குப் பங்களிக்கும் காரணிகளாகும். நம் நாட்டில் சிலர் பாலியல் கல்வியுடன் கலாசாரத்தைக் குழப்பி விட்டனர்.

எனவே, பாடசாலை குழந்தைகளுக்கு முறையான பாலியல் கல்வியை வழங்குவது ஒரு குற்றமாகக் கருதப்படுகிறது.

இளம் பருவத்தினரிடையே ஏற்படும் உடல் மாற்றங்கள், பாலியல் குறித்த ஆர்வம், அதைப் பற்றி வெளிப்படையாகப் பேச வாய்ப்புகள் இல்லாதது, அறிவியல் தகவல்களைப் பெற முடியாதது போன்ற காரணங்களால், இளைஞர்கள் பாலியல் விஷயங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த ஆர்வம் அவர்களை ஆபத்தான பிற, முறைசாரா வழிகளில் பாலினத்தை ஆராய வழிவகுக்கிறது.

இது துஷ்பிரயோகம், கற்பழிப்பு, குழந்தை கர்ப்பம் மற்றும் ஆபாசப் படங்களுக்கு அடிமையாதல் உள்ளிட்ட ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இன்றைய டீனேஜர்களிடையே ஆபாசப் படங்கள் மீதான அடிமைத்தனம் ஒரு பொதுவான பிரச்சினையாக உள்ளது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ, உள்ளூராட்சி மன்றங்களோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும், வெற்றிலையை வாயில் குதப்பியவாறு, அதைப் பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள் மனசாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக, பேருந்து தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பமான விடயமாகி விட்டது.

நன்றி -பருத்தியூர் பாலவயிரவநாதன்

# நீதியை கோரியே அழியும் நாட்கள்

லக்ஸ்மன்

மக்களுக்கான ஊடகம் பணியைச் செய்து கொண்டிருக்கையில், பலியானவர்களின் நினைவுகளை மீட்டுப் பார்க்க வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். அவர்களின் நினைவு நாளில் அவர்களுக்கான மரியாதை செலுத்துவது, அவர்களின் அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் கௌரவத்துடன் நினைவு கூருவதும் முக்கியமாகும். இதனையே பல வருடங்களாக நாம் செய்து வருகிறோம். அதே நேரத்தில் அப் படுகொலைகளுக்கான நீதியையும் கோருகிறோம்.

இலங்கையின் ஊடகத்துறை வரலாறு பல்வேறு கொலைகளையும், கொடுமைகளையும், அச்சுறுத்தல்களையும், சந்தேகப் பார்வைகளையும், நெருக்கடிகளையும் என பல மோசமான விடயங்களை உள்ளடக்கியதாகவே கடந்து போனது. இவ்வாறானவர்கள் இனிவரும் காலங்களிலேனும் இல்லாதிருக்ககடவது என்று மந்திரித்துக் கொள்வோம்.

பணியை, நேர்மையாக முன்னெடுப்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத காலங்களைக் கடந்தே யுத்த காலங்களில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் பலர் உயிரைக் காத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கு அப்பால் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன், பலர் உயிரைப் பாதுகாப்பதற்காகத் தொழிலை விட்டொதுங்கியதுடன் பலர் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து தப்பியோடித் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

2006 ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருகோணமலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். எஸ்.எஸ்.ஆர் என அழைக்கப்பட்ட இவர் திருகோணமலை நகரிலிருந்து கொண்டு பல செய்தி நிறுவனங்களுக்குச் செய்திகளை வழங்கி வந்தார். சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருகோணமலை நிருபராகக் கடமையாற்றிய சுகிர்தராஜன், வீரகேசரி, மெட்ரோ நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளையும் எழுதினார். வீரகேசரியில் எஸ்.எஸ்.ஆர், மனோ, ரஹ்மான் ஆகிய பெயர்களிலும் மெட்ரோ நியூஸில் ஈழவன் என்ற பெயரிலும் எழுதினார்.

மட்டக்களப்பு குருமண் வெளியில் பிறந்த சுகிர்தராஜன், ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்திலும் உயர்கல்வியை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு மத்திய கல்லூரிலும் பயின்றார்.

பாண்டிருப்பு கதிர்ப்பு கலை இலக்கிய வட்டத்தை நிறுவி ஸ்தாபகத் தலைவராக இருந்தார். 1997இல் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் எழுதுவினைஞராக இணைந்தது முதல் திருகோணமலை துறைமுகத்தில் கடமையாற்றிக் கொண்டு சுயாதீன செய்தியாளராகவும் எழுத்தாளராகவும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டார். இந்த நிலையில், துறைமுகத்துக்குச் செல்லும் வழியில் 2006 ஜனவரி 24ஆம் திகதி திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுகிர்தராஜன் கொல்லப்பட்டமைக்கு திருகோணமலை நிலாவெளி கடற்கரையில் இடம்பெற்ற 5 மாணவர்கள் படுகொலை தொடர்பான செய்தி சேகரிப்பு காரணம் என பின்னர் தெரியவந்திருந்தது.

2006 ஜனவரி 6ஆம் திகதி நிலாவெளி கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்த மனோகரன் ரஜீகர், யோகராஜா ஹேமச்சந்திரா, லோகிதராஜா ரோகன், தங்கதுரை சிவானந்தா, சண்முகராஜா கஜேந்திரன் ஆகிய 1985ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்புத் தரப்பும் அரசாங்கமும் இச்சம்பவத்தை ஆரம்பத்தில் மறுத்திருந்ததுடன் மாணவர்களை விடுதலைப் புலிகளாகக் காண்பிக்க முயன்றன. மாணவர்கள் படையினர் மீது கிரானைட் தாக்குதல் மேற்கொள்ள முயன்ற வேலை அக் கிரனைட்டுகள் வெடித்து மரணமானதாகக் கூறினர். இருந்தாலும், மரண பரிசோதனையில் இறந்த மாணவர்களின் உடல்களில் மிகக் கிட்டிய தூரத்தில் இருந்து சுடப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகத் தெரியவந்தது, ஊடகவியலாளர் சுகிர்தராஜன் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களின் சூட்டுக் காயங்களை நுட்பமாகக் காண்பிக்கும் வகையில் எடுத்த புகைப்படங்களே பத்திரிகை ஆதாரங்களாக அமைந்திருந்தன.

படுகொலை செய்யப்பட்ட இந்த மாணவர்களது நிழற்படங்களுடன் வெளியாகியிருந்த செய்திகள் பாதுகாப்புத் தரப்பினருடைய திசை திருப்பல் முயற்சிகளை மழுங்கடித்தன. மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டு தாக்குதலல்ல, துப்பாக்கிச் சூடு காரணம் என்பதை எடுத்துக்காட்டியமை காரணமாக அரசுக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரும், அழுத்தங்களும் ஏற்பட்டன.

சுகிர்தராஜனின் குறித்த செய்தி அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தத்தைக் கொடுத்ததுடன், அது ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கும் உள்வாங்கப்பட்டு இருந்தது. இந்த நெருக்கடியின் கோபமே அதே பாதுகாப்பு தரப்பினரால் சுகிர்தராஜன் பலியாகக் காரணமாகவும் இருந்தது. இது போலவே ஊடகவியலாளர்கள் ஒவ்வொருவரது மரணத்திலும் மறைப்புகள் இருந்த வண்ணமிருக்கின்றன.

படுகொலை செய்யப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என சர்வதேச, தேசிய, வடக்கு, கிழக்கு ஊடக அமைப்புகள் தொடர்ச்சியாகவும், மீண்டும் மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்துவது மாத்திரமே நடைபெற்று வருகிறது.இவ்வாறான நிலையில் தான், தமிழர் பிரதேசத்தில் பணியாற்றிய ஊடகவியலாளர்களின் மரணம் தொடர்பான விசாரணைகளை இந்த அரசு தவிர்த்து வருவதாக யாழ்ப்பாணம் ஊடக மையத்தின் தலைவர் கே.செல்வகுமார், யாழ்ப்பாணத்தில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குற்றம் சுமத்தியிருந்தார். அதே நேரத்தில், வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் இதுவரை அதிகாரத்திற்கு வந்த எந்தவோர் அரசாங்கமும் முறையான பக்கச்சார்பற்ற விசாரணையை மேற்கொள்ளவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு இலங்கையில் கடந்த தசாப்தத்தில் கொல்லப்பட்ட 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களின் பட்டியலை வெளியிட்டது. அவர்களில் பெரும்பாலானோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் என்றும் அறிவித்திருந்தது.

ஐயாத்துரை நடேசன், த.சிவராம், எல்.எம். பலீல் (நற்பிட்டிமுனை பலீல்), சுப்பிரமணியம் சுகிர்தராஜன், சின்னதம்பி சிவமகாராஜா, சுப்பிரமணியம் ராமச்சந்திரன், சந்திரபோஸ் சுதாகர், செல்வராசா ரஜீவர்மன், இசைவிழி செம்பியன் (சுபாஜினி), பரணி ரூபசிங்கம் தேவகுமார், இராசையா ஜெயேந்திரன், புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி, மகாலிங்கம் மகேஸ்வரன், மாரியப்பு அந்தோணி குமார், ஷோபனா தர்மராஜா (இசைப்பிரியா), குலசிங்கம் தவபாலன் மற்றும் சகாதேவன் நிலக்சன் உள்ளிட்டவர்கள், 2004-2010 வரையிலான காலப்பகுதியில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்த இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பின் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்க ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நினைவேந்தலின் போது, அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை.

இருப்பினும், புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி அனுரகுமார அமைத்த அரசாங்கத்தின் ஆரம்பத்திலேயே கைவிடப்பட்ட சர்ச்சைக்குரிய வழக்குகளை விசாரணைக்கு உட்படுத்த போவதாக அறிவித்திருந்தது. அதில் த.சிவராம், லசந்த விக்கிரமதுங்க போன்ற ஊடகவியலாளர்களுடைய வழக்குகளும் உள்வாங்கப்பட்டு இருந்தன. இதன் பின்னர், நவம்பர் இறுதிப்பகுதியில் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ கடந்த 2024 டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது, படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார். இதேவேளை, தமிழ் ஊடகவியலாளர்கள் மாத்திரமல்ல. சிங்கள மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நாட்டில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்னிற்கிறது என்றும் கூறியிருந்தார். இருப்பினும், விசாரணைகள் தொடர்பில் இன்னமும் வெளியில் வரவில்லை. நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம், ஊழல்களைக் கண்டுபிடிக்கும் செயல்பாடு என பல வேலைகளுக்கு மத்தியில் படுகொலையான மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விசாரணைகள் முன்னுரிமைப்படுத்தப்படுமா? என்பது சந்தேகமானதாகவே இருக்கிறது. படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் நினைவு தினம் கடந்த வாரத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அவரது மகள் தனது தந்தையின் கொலை தொடர்பான நீதியான விசாரணையைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொள்ளும் என நம்புவதாகத் தெரிவித்திருந்தார்.

இதுபோலவே, ஊடக தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மைகளை உலகிற்குக் கொண்டு சென்று அதனாலேயே பலியாகிப் போன ஊடகவியலாளர்களின் உறவுகளும் நம்பிக்கை கொண்டிருக்கின்றன அந்த நம்பிக்கைகள் நிறைவேற வேண்டும். அதுவரையில் சுகிர்தராஜன் பலியாகிப் போனார். ஊடகத்துறையால் காப்பாற்ற முடியாமல் போனது. தொடர்ச்சியாக நீதி விசாரணையைக் கோரும் நடவடிக்கைகளையும் தொடர்வோம். நினைவு கூருவோம்.

(திருகோணமலையில் 2006.01.24அன்று படுகொலை செய்யப்பட்ட எஸ்.சுகிர்தராஜனின் 18ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியாகிறது)

## கடிதங்கள்

### சந்தேகத்தை களையுங்கள்

அம்பாறையிலுள்ள 8 சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் தெரிவு செய்து பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ், ஸ்மார்ட் வகுப்பறை தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்பட்டன.

இதன்போது, கல்முனையில் உள்ள கமு/கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் பொருத்தப்பட்டன.

இந்தநிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை வெளியிடப்பட்டதன் காரணமாக அப் பாடசாலையில் பொருத்தப்பட்ட உபகரணங்கள் அகற்றப்பட்டன.

இதனையடுத்து, பொதுமக்களும் மாணவர்களும் "எமது பாடசாலையில் பொருத்திய உபகரணங்களை அகற்ற வேண்டாம் என கோரினர்.

இக்கோரிக்கையை அக் குழுவினர் ஏற்றுக் கொள்ளாது, உயர்மட்ட அறிவித்தல் என்று கூறியதுடன், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர், மீண்டும் பொருத்துவதாக உபகரணங்களை எடுத்துச் சென்றனர்.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்து விட்டது. எனினும், ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை அகற்றிய குழுவினர்கள், வாக்களித்தது போல், கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறை தொழில்நுட்ப உபகரணங்களை மீளவும் பொருத்தது காலம் கடத்துவதை இட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

– நூருல் ஹுதா உமர்

# வாகன இறக்குமதியும், தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களும்



ச.சேகர்



வாகன இறக்குமதி தொடர்பில் பரவலாக பேசப்படும் நிலையில், பெப்ரவரி 1ஆம் திகதி முதல் தனிநபர் பாவனைக்கான வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து இன்னமும் உத்தியோகபூர்வமான அறிவித்தல் வெளியாகவில்லை.

குறிப்பாக, கடந்த வாரம் வெளியாகியிருந்த சுங்க வரி தொடர்பான அறிவித்தலைத் தொடர்ந்து, இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பற்றி சமூக வலைத்தளங்களில் அதிகளவு பேசப்படுவதைக் காண முடிகின்றது. வாகன இறக்குமதியாளர்களாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் சிலர் மற்றும் சில நிறுவனங்கள் வாகன மாதிரிகளின் பெயர்களுடன், அவற்றின் விலைகளையும் குறிப்பிட்டு சமூக வலைத்தளங்களில் விளம்பரம் செய்வதையும், சிலர் முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்தல்களை வழங்கி வருகின்றனர். கண்களுக்குப் புலப்படாத சிறிய எழுத்துகளில், “வரி மாற்றங்களுடன் விலைகளில் மாற்றம் ஏற்படலாம்” என்பது போன்ற நிபந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் மீது நான்கு விதமான வரிகள் உள்ளடங்கியிருக்கும். அதில் இரு வரிகள் மாத்திரமே இதுவரையில் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஏனைய இரு வரிகளும் இதுவரையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில், அவற்றின் பெறுமதிகள் எவ்வாறானதாக அமைந்திருக்கும் என்பது தொடர்பில் பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

எனவே, உறுதியான தகவல்கள் வெளியாகும் வரை அவசரப்பட்டு எவருக்கும் பணத்தைச் செலுத்த வேண்டாம் என வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் அதிகாரிகள் கூட அறிவுரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழலில் தனிநபர் பாவனைகளுக்கான வாகன இறக்குமதிக்கு நாடு உண்மையில் தயாராக உள்ளதா என்ற கேள்விக்கு உண்மையான பதில் இல்லை என்பதாக இருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், நாட்டில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே, இந்த நிபந்தனையைப் பேணும் வகையில், எதிர்வரும் மாதங்களில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கினாலும், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகள் அதிகமாக அமைந்திருக்கும் என்பது போன்ற ஒரு கருத்தை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அவர்கள் அண்மையில் பங்கேற்றிருந்த சகோதர மொழி ஊடக கலந்துரையாடல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அவரின் கருத்துப்படி, தற்போதைய சூழலில் வாகனம் இறக்குமதி செய்யலாம். அவற்றின் விலை சற்று உயர்வாக அமைந்திருக்கும். அத்தியாவசியமாக வாகன தேவை கொண்டவர்களுக்கு அவற்றை வாங்க முடியும் என்பதாக அமைந்திருந்தது.

டிசெம்பர் மாத இறுதி புள்ளி விவர தரவுகளின் படி, நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படும் நிலையில், அதில் சீனாவின் பங்களிப்பான 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நீங்கலாக, பயன்படுத்தக்கூடிய தொகை சுமார் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவே காணப்படுகின்றது. இவற்றைத் தொடர்ந்து சீராகப் பேண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. எனவே, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இலங்கைக்கு வாகனம் கொண்டு வரப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் அவை பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் அரசாங்கம் விதித்துள்ளது. உண்மையில் இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். இதனால் அளவுக்கதிகமாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவை விற்பனை பகுதிகளில் நீண்ட காலமாகக் காட்சிப்படுத்தி வைத்து, உயர்ந்த விலையில் விற்பனை செய்வதைத் தவிர்க்கவும், அளவுக்கதிகமாக அந்நியச் செலாவணி வெளியேற்றத்தைத் தவிர்க்கவும் உதவும். அத்துடன், அத்தியாவசியமாக வாகனம் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை உடையவர்கள் மாத்திரம் தமக்கு விரும்பிய வாகனத்தை இறக்குமதியாளர்களினூடாக இறக்குமதி செய்து பெற்றுக் கொள்ள முடியும். மற்றுமொரு சிறந்த விடயமாகக் குறிப்பிடக்கூடியது, தனிப்பட்ட பாவனைக்காக உற்பத்தி செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்கு உட்பட்ட வாகனங்களை மாத்திரமே இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில தரப்பினர் பத்து வருடங்கள் வரையில் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்யலாம் என கூறினாலும், அவை நிர்மாணத் தேவைகள் போன்ற வணிக நோக்கங்களுக்கான வாகனங்களாக அமைந்துள்ளன.

தனிநபர் பாவனைக்குரிய வாகனங்களுக்கு பத்து வருட காலம் பொருந்தாது. கொவிட் தொற்றுப் பரவலுக்குப் பின்னரான சூழலில் ஜப்பானில் வாகன உற்பத்திகள் குறைவடைந்துள்ளன. இதில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் மீது வரி விதிப்பு உயர்வாக உள்ள நிலையில், அந்நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்நாடுகளில் ஜப்பானிய வாகன உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமை தாக்கம் செலுத்தியுள்ளது.இலங்கைக்கு ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வாகனங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்படும் நிலையில், மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்ற அரசின் தீர்மானம், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களைக் கட்டுப்படுத்தும் மற்றுமொரு வியூகமாக அமைந்திருக்கும்.

இறுதியாக வாகன இறக்குமதி 2020 மார்ச் மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னரும் இலத்திரனியல் வாகனங்கள், பொதுப் போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான வாகனங்கள் அவ்வப்போது இறக்குமதி செய்யப்பட்டாலும், திறந்த முறையில் பொது மக்கள் பாவனைக்கான வாகன இறக்குமதி பொருளாதார நெருக்கடியையும், அந்நியச் செலாவணி இருப்பு இன்மையையும் காரணம் காண்பித்து இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் அமெரிக்க டொலரின் பெறுமதி சுமார் 180-190 ரூபாய்களுக்கு இடைப்பட்டதாகக் காணப்பட்டது. தற்போது இந்தப் பெறுமதி 290- 295 ரூபாவாக காணப்படுகின்றது. இதில், சுமார் 100 ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் பெறுமதி 2020ஆம் ஆண்டில் காணப்பட்டதை விட உயர்வானதாகவே அமைந்திருக்கும். வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டால், சந்தையில் அமெரிக்க டொலர்களுக்கான கேள்வியும் அதிகரிக்கும், இதனால் தற்போது, 290-295 ரூபாவாக காணப்படும் அமெரிக்க டொலரின் பெறுமதி 310-320 ரூபாய் வரையில் அதிகரிக்கலாம்.

இவ்வாறிருக்க இந்த வாகன இறக்குமதி தொடர்பில் உள்நாட்டில் ஏற்கெனவே வாகனங்களின் உரிமையாளர்களாகக் காணப்படுவோர் மத்தியிலும், வாகனமொன்றை வாங்கும் கனவுடன் திகழ்வோரிடமும் பிரதேச ரீதியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. வட பிராந்தியத்தை எடுத்துக் கொண்டால், அங்கு வாகனமொன்றை வாங்கி விற்பதில் ஆர்வம் காண்பிப்பது மிகவும் குறைவு. வாகனமொன்றை வாங்கினால் அதனை நீண்ட காலம் பேணி பயன்படுத்தும் ஒரு மனநிலை கொண்டவர்களாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் நிலைமை சற்று வேறு, பத்து வருடத்தினுள் நாட்டின் அனைவருக்கும் வாகனமொன்றை வாங்கக் கூடிய சூழல் உருவாக்கப்படும் என அரசாங்கத்தின் அங்கத்தவரான பாராளுமன்ற உறுப்பினர் நளின் ஹேவகே அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அதன் பிரகாரம் அப்பகுதி மக்கள் வாகன இறக்குமதி தொடர்பிலும், 40-50 இலட்சம் ரூபாய்க்கு வாகனமொன்றைக் கொள்வனவு செய்யலாம் என்ற பலத்த எதிர்பார்ப்பைக் கொண்டிருந்த போதிலும், அண்மைய வரி விதிப்பினூடாக அது சாத்தியமற்றது என்பது புலனாகியுள்ள நிலையில், பாவித்த வாகனங்களின் விலைகளில் எவ்வாறான நிலை ஏற்படும் என்பதில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

மத்திய மாகாணத்தைப் பொறுத்தமட்டில், வாகன இறக்குமதியில் அவர்களுக்கு முற்றிலும் நாட்டம் இல்லாத ஒரு நிலையே உள்ளது எனக் குறிப்பிடலாம். வாகனம் வைத்திருப்பவர்களும் வாகன இறக்குமதியுடன் தமது வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துவிடுமோ என்ற ஒரு பதட்டத்துடனும், அதனால் அவற்றை விற்பனை செய்வது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

வாகன இறக்குமதி என்பது வெறும் வாகனங்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்படுவதல்ல. அவற்றுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், அவற்றைச் செலுத்துவதற்கு அவசியமான எண்ணெய் வகைகள் மற்றும் எரிபொருட்களும் இறக்குமதி செய்யப்பட வேண்டும். இவற்றுக்காகவும் அந்நியச் செலாவணி செலவிடப்பட வேண்டியிருக்கும். எனவே, வாகன இறக்குமதி என்பது வாகனங்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்படுவது என்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது.

உள்நாட்டில் காணப்படும் பாவித்த வாகனங்களின் விலைகளை நியமப்படுத்துவதற்கு பொறிமுறை இருப்பது அவசியமாகின்றது. குறிப்பாக வாகனங்கள் இறக்குமதியுடன், இந்த நியமப்படுத்தலை மேற்கொள்வது சிறந்ததாக அமைந்திருக்கும். வாகனங்கள் என்பது பெரும்பாலும் இரும்பினால் ஆனவை. தங்கத்தால் செய்யப்பட்டவை அல்ல. எனவே, காலப்போக்குடன் அவற்றின் பெறுமதி இலட்சக் கணக்கில் அதிகரிப்பது என்பது நடைமுறைக்குப் புறம்பானதாகும். ஆனாலும், இலங்கையில் வாகன இறக்குமதி கட்டுப்பாட்டைக் காரணம் காண்பித்துப் பயன்படுத்திய வாகனங்களின் விலைகள் சுமார் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. குறிப்பாக, 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சுமார் 6.2 மில்லியனுக்கு விற்பனையாகிய கார், ஒரு வருடம் கழிந்த பின்னர் 7.8 மில்லியன் ரூபாய்க்கு விற்பனைக்காக விளம்பரம் செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. இது போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் தலையீடு அவசியமாகின்றது.

இந்த அசாதாரண விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்தவும், வாகன மாபியாக்களை அடக்கவும், அரசாங்கம் விலை மதிப்பீட்டு பொறிமுறை ஒன்றை பாவனையாளர்களுக்காக அறிமுகம் செய்யலாம். இதற்காக வாகனப் பதிவு திணைக்களத்தில் விலை மதிப்பீட்டுக்காக கரும பீடமொன்றை ஏற்படுத்தி, ஒரு சிறுதொகை கட்டணத்தை கொள்வனவாளரிடமிருந்து பெற்று, தாம் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வாகனத்தின் பதிவுப் புத்தகம் மற்றும் வாகனத்தின் பௌதிக நிலை அறிக்கை போன்றவற்றைக் கொண்டு அதன் சந்தை விலை ஒரு குறித்த மட்டத்தில் காணப்படும் என்பதைச் சான்றாக வழங்கலாம். இதனூடாக, அசாதாரணமாக அதிகரித்துச் செல்லும் பயன்படுத்திய வாகனங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி சாதாரண நிலையைப் பேண முடியும். இது காப்புறுதி மற்றும் லீசிங் போன்ற வசதிகளுக்கும் உதவியாக அமைந்திருக்கும்.

வாகன விலை மதிப்பீடு தற்போது தனியார் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றைக் கண்காணிப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு எவ்விதமான முறைகளும் இல்லை. இவ்வாறான சூழலில் வாகனங்களின் விலைகளைச் சீரான நிலையில் பேணுவதற்கும், அளவுக்கதிகமான தொகையைச் செலுத்தி வாங்குவதைத் தவிர்க்கும் வகையிலும் அரசாங்கத்தின் தலையீடு முக்கியமானதாக அமைந்திருக்கும்.

இலங்கையில் ஏற்கெனவே பயன்படுத்திய வாகனங்களின் விலைகளுக்கு நிகரானதாக அல்லது அவற்றை விட சற்றே அதிகரித்ததாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை இருக்குமாயின், பயன்படுத்திய வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஏனெனில், புதிய வாகனமொன்றை வாங்குவதில் நாட்டம் காண்பிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அவ்வாறான சூழலில், அவற்றின் லீசிங் பெறுமதி மற்றும் காப்புறுதி பெறுமதி போன்றனவும் மாற்றமடைய வேண்டும். ஆனாலும், அவற்றின் உடன்படிக்கைகளின் பிரகாரம் மாற்றம் ஏற்படாது. உதாரணமாக 2019ஆம் ஆண்டில் 7 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட வாகனமொன்றின் விலை தற்போது 17 மில்லியனாக உயர்ந்துள்ளது. புதிதாக இறக்குமதி செய்யப்படும் வாகனமொன்றின் விலை 14 மில்லியனாக இருந்தால், ஏற்கெனவே அந்த 2019ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாகனத்தை வைத்திருப்போருக்கு ஏற்படும் நட்டம் அதிகமானதாக இருக்கும். ஏனெனில், அவர் 17 மில்லியன் பெறுமதிக்கே ‘லீசிங்’ செய்திருப்பார், காப்புறுதி செய்திருப்பார். இவ்வாறான பாதிப்பிலிருந்து வாகன உரிமையாளர்களைப் பாதுகாப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பிலும் கேள்விகள் நிலவுகின்றன. இவ்வாறான பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தி, பாதிப்பு ஏற்படுவதைக் குறைத்து இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என்பது போன்ற கருத்தை மத்திய வங்கியின் ஆளுநர் தமது உரையாடலின் போது குறிப்பிட்டிருந்தார்.

இந்த அரசாங்கத்தினால் வாகன விலை மதிப்பீடு என்பது பயன்படுத்திய வாகனங்களுக்கு மாத்திரமன்றி, இறக்குமதி செய்யப்படும் புதிய வாகனங்களுக்கும் பொருந்தும். ஏனெனில், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு இலங்கையில் முகவர்கள் உள்ளனர். ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில ரக வாகனங்களுக்கு முகவர்கள் இருந்தாலும், அவர்களுக்கு அப்பால் குறித்த நிறுவனங்களின் முகவர்கள் அல்லாதவர்களும் அதில் அடங்குகின்றனர். எனவே, இவ்வாறு இறக்குமதி செய்வோர், வாகனங்களின் விலைகளை தமக்கு விரும்பியவாறான விலைகளில் விற்பனை செய்வதை இந்த விலை மதிப்பீட்டு முறையினூடாக கட்டுப்படுத்த முடியும்.

வாகனம் என்பது பலரின் ஒரு கனவு. சிலருக்கு மட்டுமே அது சாத்தியப்படுகின்றது. அந்த கனவை நோக்கி பலர் பல்வேறு திட்டங்களை வகுத்து வாழ்க்கையை முன்னெடுக்கின்றனர். இலங்கையில் 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த வாகனக் கனவு என்பது பலராலும் சாத்தியப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும், அதன் பின்னர் நாட்டில் எழுந்த சவால் நிலைகளால் அந்த கனவைக் கனவாகவே கொண்டு, அத்தியாவசிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய நிலைக்கு பொது மக்கள் தள்ளப்பட்டனர். நாட்டிலும் தற்போது தீர்க்கப்பட வேண்டிய பல முக்கிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு முழுமையாக இன்னமும் மீளவில்லை. அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்வதில் மக்கள் இன்னமும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளனர். இன்றைய சூழலில் வாகனம் என்பது ஒரு அத்தியாவசியத் தேவை என்பதிலிருந்து ஒரு ஆடம்பரத் தேவை எனும் நிலைக்கு மேலும் தள்ளப்பட்டுள்ளது. பொது மக்களின் பொதுப்போக்குவரத்து தேவைகளை நிவர்த்தி செய்வதனூடாக தனிநபர் பாவனைக்குரிய வாகனத் தேவையை ஓரளவு நிவர்த்தி செய்யலாம். குறிப்பாக, தற்போது வீதிகளில் இயங்கும் அரச பேருந்துகள் தரமுயர்த்தப்பட வேண்டும். குளிரூட்டப்பட்ட பேருந்து வசதிகள் தற்போது தூரப் பிரதேசங்களுக்கும், அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்பதற்கும் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நகரினுள் பேருந்து சேவையிலும் இவ்வாறான குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து சேவைகளை அறிமுகம் செய்ய வேண்டும். குறிப்பாக, அலுவலக செயற்பாடுகள் ஆரம்பிக்கும் நேரம் மற்றும் முடிவடையும் நேரங்களில் அவற்றை இயக்கினால் தனிநபர் வாகனங்களில் அலுவலகம் பயணிப்போர் அந்த சேவையைப் பயன்படுத்தத் தூண்டப்படுவர். ஆசன இருக்கைகளின் அடிப்படையில் பயணிகளைக் கொண்டு செல்வதையும் அல்லது ஒரு பேருந்தில் குறித்த எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுவது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தலாம்.

அலுவலக பணிகள் ஆரம்பிக்கும் முன்னரும், முடிவடைந்த பின்னரும் கொழும்பையும், அதனை அண்மித்த பகுதிகளிலும் வீதிகளில் பெருமளவு வாகன நெரிசலை அவதானிக்க முடிகின்றது. காரணம், கொழும்பில் கடந்த 20 வருடங்களில் வீதிகளில் விடுவிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப வீதி வலையமைப்பு விஸ்தரிப்பு செய்யப்படவில்லை. சந்திகளை ஊடறுத்து மேம்பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனாலும், மேம்பாலங்களினூடாக மாற்று வீதிகள் அமைக்கப்படவில்லை. வாகன இறக்குமதியுடன் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்படும். வாகன விபத்துகளினால் இடம்பெறும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகமாக உள்ளது. இதனால் வாகன இறக்குமதிக்கு முழுமையாக அனுமதியளிக்கப்படும் முன்னர் நாட்டினுள் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சனைகள் உள்ளன. நீண்ட கால அடிப்படையிலேனும் வீதி விஸ்தரிப்பு மாற்று வீதிகள் அமைப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இஸ்ரேல்

காசா போர் நிறுத்த ஒப்பந்தம்:

# 1,890 கைதிகள் விடுவிப்பு



இஸ்ரேல் மற்றும் காசா இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, முதற்கட்டமாக 1,890 பாலஸ்தீனிய சிறை கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி, ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில் இஸ்ரேல் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.

எனினும், போர் நிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில் தொடக்கத்தில், அவர்களில் சிலரை இஸ்ரேல் மீட்டது. மீதமுள்ளவர்களையும் மீட்போம் என சூளுரைத்தது.

“ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை ஓயமாட்டோம்” என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சபதம் எடுத்தார்.

இதற்காக காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து போர் செய்து வந்தது.

ஓராண்டைக் கடந்து, காசாவில் நடந்து வரும் மோதலில் பாலஸ்தீனியர்களில் 46,900 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 700 பேர் காயமடைந்துள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இந்நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக எகிப்து, கத்தார் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் ஏற்படுத்தும் பேச்சுவார்த்தைக்கான பணியில் ஈடுபட்டு வருகின்றன.

போரை நிறுத்த ஏதுவாக நடந்து வரும் இதில் பலன் ஏற்பட்டுள்ளது. இதன்படி, காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு இஸ்ரேல் அமைச்சரவை, சனிக்கிழமை (18) ஒப்புதல் அளித்தது.

இதனால், பணய கைதிகளாகச் சிறை பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேல் மக்கள் 94 பேரைப் பாதுகாப்பாக விடுவிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இவர்களில் 3இல் ஒரு பகுதியினர் உயிரிழந்து இருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, முதல் கட்டத்தில் 1,890 பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுவிக்கவுள்ளது என எகிப்து தெரிவித்துள்ளது.

காசா போர் நிறுத்த ஒப்பந்தம், ஞாயிற்றுக்கிழமை (19) முதல் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பிடித்து வைத்துள்ள கைதிகளை பரஸ்பரம் விடுவிக்கும் நிகழ்வு நடைபெறும் என எகிப்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்தி தெரிவிக்கின்றது.


இந்த முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் 42 நாட்கள் நீடிக்கும். அது இலங்கை நேரப்படி ஞாயிற்றுக்கிழமை (19) மதியத்தில் இருந்து தொடங்கும். இதன்படி, முதற்கட்டமாக 1,890 பாலஸ்தீனிய சிறை கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

இதற்கு ஈடாக, காசாவில் இருந்து, ஹமாஸ் அமைப்பு பிடித்து வைத்துள்ள இஸ்ரேல் பணய கைதிகளில் 33 பேர் விடுவிக்கப்படுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல்

தேவைப்பட்டால்

# “மீண்டும் போர்”



“தேவைப்பட்டால், அமெரிக்கா உதவியுடன் போரை மீண்டும் தொடங்குவதற்கான உரிமை இஸேர்ரலுக்கு உள்ளது” என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

இஸ்ரேல் - காசா போர் நிறுத்தம் குறித்து முடிவு எடுப்பதற்காக, இஸ்ரேல் அமைச்சரவை, சனிக்கிழமை(18) அதிகாலை கூடியது. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், காசாவில் போர் நிறுத்தம் செய்வதற்கான ஒப்பந்ததுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை (19) காலை போர் நிறுத்தம் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தம் அமுலுக்கு வர சில மணி நேரங்களே உள்ள நிலையில், பெஞ்சமின் நெதன்யாகு தனது எக்ஸ் தளத்தில் பரபரப்பு பதிவு ஒன்றைப் போட்டுள்ளார்.

அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது,

“ஹமாஸ் அமைப்பு ஒப்புக்கொண்டபடி விடுவிக்கப்படவுள்ள பணையக் கைதிகளின் பட்டியலை வெளியிடாதவரை இதை (ஒப்பந்தம்) நாம் முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஒப்பந்தத்தில் விதி மீறல் இருந்தால் அதை இஸ்ரேல் சகித்துக்கொள்ளாது. ஹமாஸ் மட்டுமே இதற்கு முழு பொறுப்பு” என குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து தொலைக்காட்சியில் உரையாற்றிய நெதன்யாகு,

“தேவைப்பட்டால் அமெரிக்கா உதவியுடன் போரை மீண்டும் தொடங்குவதற்கான உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது. பணையக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவதை நான் உறுதி செய்வேன்” என்றார்.

இந்தியா

ட்ரம்ப் பதவியேற்பு விழா:

# அம்பானிக்கும் அழைப்பு



அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று திங்கட்கிழமை (20) பதவியேற்க உள்ள நிலையில், இந்த விழாவில் கலந்துகொள்ள உலக தலைவர்கள் பலருக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்தியாவின் பிரபல தொழிலதிபரும் பெரும் கோடீஸ்வரருமான முகேஷ் அம்பானி மற்றும் அவரது மனைவி நீடா அம்பானி ஆகிய இருவரும், ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் பங்கேற்க இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக அவர்கள் இருவரும், சனிக்கிழமை (18) அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதன்போது, ட்ரம்பின் புதிய அரசில் அமைச்சர்களாகப் பதவியேற்க உள்ளவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் உட்பட முக்கிய விருந்தினர்கள் அமரும் மேடையில் முகேஷ் அம்பானி மற்றும் நீடா அம்பானிக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக, தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பதவியேற்பு விழாவுக்கு முன்பாக துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜே.டி. வான்ஸ் அளிக்கும் இரவு விருந்தில், முகேஷ் அம்பானியும், நீடா அம்பானியும் பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி பதவியேற்பு விழா வழக்கமாக அமெரிக்கப் பாராளுமன்றத்துக்கு அருகே பொதுவெளியில் நடத்தப்படும் நிலையில், இந்த முறை கடும் குளிர் காரணமாகப் பாராளுமன்றத்துக்குள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜம்மு - காஷ்மீர்

16 மர்ம மரணங்கள்:

# காரணத்தை ஆராய குழு நியமனம்



இந்தியாவின் ஜம்மு - காஷ்மீரில் மர்ம மரணங்கள் ஏற்பட்ட நிலையில், தொற்று வியாதிக்கான சாத்தியம் எதுவும் இல்லை என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ரஜோரி மாவட்டத்தின் புதல் கிராமத்தில், மர்ம நோய் பரவியுள்ளது. இதனால், கடந்த 45 நாட்களில் 16 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இது கிராமத்தினரிடையே பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மர்ம நோய்க்கு ஆளானவர்களுக்குக் காய்ச்சல், வலி, குமட்டல் மற்றும் சுயநினைவை இழத்தல் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. அவர்கள் சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எனினும், அவர்களில் சிலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். ஒரு சிறுமிக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, காஷ்மீரில் 16 பேர் மர்ம நோய்ப் பாதிப்புக்குப் பலியான சம்பவம் பற்றி ஆய்வு செய்ய அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை அமைத்துள்ளார். அந்த குழுவினர் காஷ்மீருக்குச் சென்று ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர்.

எனினும், தொற்று வியாதிக்கான சாத்தியம் எதுவும் இல்லை என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# லெகனிஸிடம் தோற்ற அத்லெட்டிகோ மட்ரிட்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், லெகனிஸின் மைதானத்தில் சனிக்கிழமை (18) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் தோற்றது.

லெகனிஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை மடிஜா நஸ்டசிச் பெற்றிருந்தார்.


இதேவேளை, கெட்டாஃபேயின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது. பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலெஸ் கூன்டே பெற்றதோடு, கெட்டாஃபே சார்பாகப் பெறப்பட்ட கோலை மௌரோ அரம்பரி பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் தரவரிசையில் 44 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் அத்லெட்டிகோ உள்ளது. 43 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டும், 39 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 36 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றன.

இதில் றியல் மட்ரிட்டும், அத்லெட்டிக் பில்பாவோவும் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

# சமநிலையில் ஆர்சனல் - வில்லா போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(18) நடைபெற்ற அஸ்தன் வில்லாவுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

ஆர்சனல் சார்பாக கப்ரியல் மார்டினெல்லி, கை ஹவேர்ட்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வில்லா சார்பாக யூரி டெலிமான்ஸ், ஒலி வட்கின்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் லிவர்பூல் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்திலுள்ளது. 44 புள்ளிகளுடன் ஆர்சனல் இரண்டாமிடத்திலும், 41 புள்ளிகளுடன் நொட்டிங்ஹாம் பொரெஸ்ட் மூன்றாமிடத்திலும், 38 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில் லிவர்பூலும், நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# அத்லாண்டாவை வென்ற நாப்போலி



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், அத்லாண்டாவின் மைதானத்தில் சனிக்கிழமை(18) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-2 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றது.

நாப்போலி சார்பாக மட்டியோ பொலிட்டானோ, ஸ்கொட் மக்டொமினி, றொமெலு லுகாக்கு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லாண்டா சார்பாக மட்டியோ றெடெகுய், அடெமோலா லுக்மன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற ஏ.சி மிலனுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் வென்றது. ஜுவென்டஸ் சார்பாக சாமுவேல் மபன்குலா, திமோதி வெயா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது.



ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடர்:

# மொச்சென்கிளெட்பாவை வென்ற லெவர்குசன்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா (Bundesliga) தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(18) நடைபெற்ற பொரூசியா மொச்சென்கிளெட்பாவுடனான போட்டியில், 3-1 என்ற கோல் கணக்கில் பயேர் லெவர்குசன் வென்றது.

லெவர்குசன் சார்பாகப் புளோரியன் ரிட்ஸ் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, பற்றிக் ஸ்சிச் ஒரு கோலைப் பெற்றார். மொச்சென்கிளெட்பா சார்பாகப் பெறப்பட்ட கோலை டிம் கிளெய்ன்டைன்ஸ்ட் பெற்றிருந்தார்.

பெண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 45 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பயேர்ண் மியூனிச் காணப்படுகின்றது. 41 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லெவர்குசனும், 36 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஐன்ரச்ட் பிராங்ஃபேர்ட்டும், 32 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் வி.எஃப்.பி ஸ்டட்கார்ட்டும் காணப்படுகின்றன.

# இந்தியக் குழாமில் ஜைஸ்வால்

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமில் யஷஸ்வி ஜைஸ்வால் இடம்பெற்றுள்ளார்.

உபாதைக்குள்ளான ஜஸ்பிரிட் பும்ரா, குல்தீப் யாதவ் ஆகியோரும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்துக்கெதிரான தொடரில் பும்ராவுக்குப் பதில் ஹர்ஷித் ரானா இடம்பெற்றுள்ளதோடு, மூன்றாவது போட்டியில் தனது உடற்றகுதியை பும்ரா சோதிக்கவுள்ளார். ரானா ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் இடம்பெறுவதும் இதுவே முதற்தடவையாகும்.

மொஹமட் சிராஜ் குழாமில் இடம்பெறாத நிலையில் அர்ஷ்டீப் சிங் குழாமில் இடம்பெற்றுள்ளதோடு, வொஷிங்டன் சுந்தரும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

உப அணித்தலைவராக ஷுப்மன் கில் பெயரிடப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 20, ஜனவரி 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.